# ● தொண்டமானுற்றில் விமான, பீரங்கி தாக்கு!

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANACU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2024 கார்த்திகை 2 இதழ் 273
யாழ்ப்பாணம் புதன்கிழமை 17-11-1993

(யாழ்ப்பாணம்)

தொண்டமானாறுப் பகுதியில் நேற்று விமானப் படையினரும், கடற்படையினரும், இராணுவமும் ஒரே நேரத்தில் தாக்குதலை மேற்கொண்டனர்.

நேற்றுக் காலை 8-00 மணி முதல் 8-30 வரை இத்தாக்குதல் இடம் பெற்றது.

பலாலி விமானநிலையத்தில் இருந்து புறப்பட்ட 2 பொம்பர் விமானங்களும், ஹெலிகொப்டர் ஒன்றும் தொண்டமானாறு செல்வச்சந்நிதி கோவில் பகுதியை வட்டமிட்டு, குண்டு வீச்சு மற்றும் சுலிபர் தாக்குதலை மேற்கொண்டன. அவ்ரோ விமானம் ஒன்றும் அங்கு வட்டமிட்டுக்கொண்டிருந்தது.

இதேவேளை தொண்டமானாறு கடற் பிராந்தியத்தில்

(4-ம் பக்கம் பார்க்க)

## மாவீரர் எழுச்சி வாரம் இன்று முதல் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

மாவீரர் தினத்திற்கு முன்னோடியாக இடம் பெறும் மாவீரர் எழுச்சிவாரம் இன்று ஆரம்பமாகிறது.

மாவீரர் நினைவுதின விழாவிற்கான ஏற்பாடுகள் நடவடிக்கைகள் தொடர்பான கலந்தாலோசனைக் கூட்டங்கள் இவ் எழுச்சி வாரத்தில் நிகழவுள்ளன அத்தோடு சிரமதானப்பணிகளும் நடைபெறவுள்ளன.

## ★ கைப்பற்றிய நவீன ஆயுதங்கள் மூலம்

# பூநகரி இராணுவத்தினர் மீது புலிகள் மீண்டும் தாக்குதல்!

## படையினர் பலர் காயம்

(கொழும்பு)

பூநகரிக்கு வந்துள்ள இராணுவத்தினர் மீது, நேற்று முதல் தமிழீழ விடுதலைப் புலிகள் மீண்டும் தாக்குதல்களை ஆரம்பித்துள்ளனர். கடந்த வாரம் இடம்பெற்ற பூநகரி முகாம் தகர்ப்பின்போது கைப்பற்றப்பட்ட ஆயுதங்களைக் கொண்டே, புலிகள் இத்தாக்குதல்களை மேற்கொண்டுவருவதாகப் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

இராணுவத்தினரிடமிருந்து கைப்பற்றிய 120 மில்லிமீற்றர் பீரங்கியின் மூலமே புலிகள் படையினர் மீது தாக்குதல்களை மேற்கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பூநகரி இராணுவ முகாமின் காவலரண்களைப் பாதுகாத்துக்கொண்டிருந்த படையினர் பலர் இத்தாக்குதலில் காயமடைந்தனர். எனினும் இந்தப் பகுதி மணற்பரப்பான இடம் என்பதால் பாரிய சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை என்று இராணுவப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். -இ-ரி

## படைமுகாம் அழிப்பிற்கு பின் 70 படையினரை காணவில்லை

(கொழும்பு)

பூநகரி நாகதேவன்துறை கடற்படைத்தளம் மீது விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலில் சுமார் எழுபது ராணுவத்தினரையும், கடற்படையினரையும் காணவில்லை என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. இவர்கள் அனைவரும் விடுதலைப் புலிகளிடம் சிக்கியிருக்கலாம் என கூறப்படுகிறது.

இத்தாக்குதலில் கொல்லப்பட்டவர்கள், காயமடைந்தவர்கள்

(2-ம் பக்கம் பார்க்க)

## முள்ளியவளை ஆஸ்பத்திரிமீது சுப்பர்சோனிக் குண்டு வீச்சு

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவுப்பகுதி முள்ளியவளை அரசினர் வைத்திய சாலையும் நேற்று முன்தினம் விமானப்படையினரின் தாக்குதலுக்கு இலக்காகி ஆஸ்பத்திரி சேதமடைந்தது.

நேற்று முன்தினம் மாலை முள்ளியவளைப் பகுதியை நோக்கி வந்த இரு சுப்பர் சொனிக்விமானங்கள் முள்ளிய

(2ம் பக்கம் பார்க்க)

## ★ தமிழீழத்தைப் பெறும் அளவிற்கு புலிகள் வளர்ந்துவிட்டனர் அரசியல் தீர்வு உடன் தேவை!

### நாடாளுமன்றில் முஸ்லிம் எம். பி.

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு பிரச்சினைக்கு உடனடியாக அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் அதற்கான அவசியமும் அவசரமும் இப்போது ஏற்பட்டுள்ளது. ஏனெனில் விடுதலைப் புலிகள் இப்போது வலிமையில் அந்த அளவுக்கு வளர்ந்து விட்டனர். தமிழ் ஈழத்தைப் பெற்றுக்கொள்ளும் இலக்கை இப்போது அவர்கள் வெகுவாக நெருங்கிவிட்டனர்.

மட்டக்களப்பு மாவட்ட

(4-ம் பக்கம் பார்க்க)

## படை அதிகாரிகளுக்கு வடபகுதி முகாம்களுக்கு விஜயம்செய்யுமாறு பணிப்பு

(கொழும்பு)

வடபகுதியில் உள்ள இராணுவ முகாம்களுக்கு நேரடியாக விஜயம் செய்யுமாறு படை உயர் அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா உத்தரவுகளைப் பிறப்பித்துள்ளதாக தெரிவிக்கப்

(2-ம் பக்கம் பார்க்க)

## பூநகரியிலிருந்த படையினர் விபரம் இன்று உறவினருக்கு தெரிவிப்பு

(கொழும்பு)

நவம்பர் 11-ம் திகதி வரை தொடர்ந்தும் பூநகரியில் கடமையாற்றிய இராணுவ, கடற்படை சிப்பாய்களின் பெற்றோர்களுக்கு அவர்களைப் பற்றிய விபரங்களைத் தெரிவிக்கும் வேலைகள் இன்று முதல் நடைபெறும் என்று பாதுகாப்பு நடவடிக்கை தலைமைச் செயலகம் அறிவித்துள்ளது.

இன்று முதல் அடுத்த 48 மணித்தியாலயத்திற்குள் இராணுவ, கடற்படை தலைமை அலுவலகங்கள் மூலம் பெற்றோர்களுக்கும் உறவினர்களுக்கும் தகவல்கள் கடிதம் மூலம் அறிவிக்கப்படும் என்றும் நடவடிக்கை தலைமைச் செயலகம் அறிவித்துள்ளது.

## பௌத்தர் — கிறிஸ்தவர் இடையில் முறுகல் நிலை

(கொழும்பு)

தென்பகுதியில் பௌத்தர்களுக்கும் கிறிஸ்தவர்களுக்குமிடையில் ஒரு முறுகல் நிலை உருவாகி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

அண்மைக் காலமாக சில கல பௌத்தர்கள் கிறிஸ்தவ சமயத்திற்கு மதம் மாற்றப்படுகிறார்கள் என்று பௌத்த பிக்குகள் ஒரு குற்றச்சாட்டை எழுப்பியிருந்தனர்.

மக்களின் வறுமை நிலையைப் பயன்படுத்தி இந்தமத மாற்றம் செய்யப்படுவதாகவும் அரசு இந்த விடயத்தில் உடன் தலையிடவேண்டும் எனவும் பௌத்த பிக்குகள் ஒரு எதிர்ப்பு இயக்கத்தை ஆரம்பித்தனர், இதனையடுத்தே இந்த முறுகல்நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## கண்மூடித்தனமான குண்டுவீச்சை நிறுத்தகோரி ஜனாதிபதிக்கு மகஜர்

(யாழ்ப்பாணம்)

யாழ் குடா நாட்டில் கண்மூடித்தனமாக மேற்கொள்ளப்படும் விமானக் குண்டு வீச்சுக்கள் மற்றும் ஷெல் தாக்குதல்கள் உடனடியாக நிறுத்துமாறு பாதுகாப்புப் படையினருக்கு பணிக்குமாறு வெகுஜன அமைப்புகள் ஒன்றிணைந்து ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவுக்கு மகஜர் மூலம் வலியுறுத்தியுள்ளது.

(2-ம் பக்கம் பார்க்க)

## மினி விளம்பரம்

### விற்பனையாகின்றது

பாலைஜியின் விடுதலை புதிர் விலை 150. யாழ்ப்பாணத்தில் சகல புத்தகசாலைகளிலும், நூர்க்கா சுன்னாகம், மொடன் (நவீன களஞ்சியம்) நெல்லியடி, லெமி சாவகச்சேரி, பிபெல்ஸ் (B) கிளிநொச்சி. விலை: 20. (ஏ-3556)

### சாயிபாபா போல் மற்றுமோர் அவதார புருஷர்

தமிழ்நாடு இலங்கைச் சித்தர்- ஸ்ரீமுத்துக்காமாட்சி சுவாமிகளின் அற்புதங்களும், வியாழ, சனி மாற்றப் பலன்களும் ரூபா 10/- எங்கும் கிடைக்கும். சோபி நா, யாழ்ப்பாணம். (சி-683)

## வியாபாரம்பெருக விளம்பரம் செய்க

### முன்னியலளை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வை வைத்தியசாலையை நோக்கி குண்டுவீச்சைமேற்கொண்டன.

இரண்டு விமானங்களும் மாறிமாறி வீசிய குண்டுகள் வைத்தியசாலையின் முன் பக்கத்தில் விழுந்து வெடித்ததில் வைத்தியசாலை முன் பகுதி முற்றாகசேதமடைந்தது சிகிச்சைக்காக வந்திருந்த நோயாளர், வைத்தியசாலை ஊழியர்கள் சிதறி ஓடியும் சிலர் காயமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்தவர்கள் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற அஞ்சி தமது இருப்பிடங்களுக் சென்றதால் காயமடைந்தவர்கள் குறித்து சரியான விபரம் பெறமுடியாதுள்ளது. (நி)

## மக்கள் அஞ்சலி

(ஆனைப்பந்தி)

பூநகரிப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்துடனான மோதலில் வீரச்சாவடைந்த வீர வேங்கைகளான தூயமணி நஜிபுக்கா (தனேயகிங்கம் உமைசங்கர் புங்குடுதீவு பழனிவேல் (சங்கரப்பிள்ளை பஞ்சேந்திரன் வேலணை) கண்ணன் தினேஷ் (திலையம்பலம் தர்மயோகன் ஊர்காவற்றுறை) பூமகள் விஜயா (செல்லையா உதயராணி புங்குடுதீவு ஆகிய நான்கு மாவீரர்களினதும் வித்துடல்கள் கடந்த ஞாயிறு பிற்பகல் யாழ். புகையிரத நிலைய இடம்பெயர்ந்தோர் முகாமில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டன.

பெருந்திரளான மக்களும் போராளிகளும் இம் மாவீரர்களுக்கு தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினர் -101

## மாவீரர் நாள் ஏற்பாடுகள்

(மானிப்பாய்)

மாவீரர் நினைவுதினத்தை யொட்டி ஆனைக்கோட்டையிலுள்ள மாவீரர் நினைவாலயம் ஆனைக்கோட்டை இந்து ரீ செயலகத்தினால் புதுப்பொலிவூட்டப்பட்டு வருகிறது. -71

### சிரமதானப் பணி

(அரியாலை)

மாவீரர் நாளையொட்டி யாழ். இராசாவின்தோட்ட மக்களால் அங்குள்ள சனசமூக நிலைய முன்றல் அருள்மாதா ஆலய முன்றல் ஆகியன சிரமதானப்பணிமூலம் துப்பரவு செய்யப்பட்டு வருகிறது.

### அலங்காரப் பந்தல்

யாழ். அரசுகுள வீதியில் அலங்காரப் பந்தல்கள், கொடிசீலைகள் கட்டப்பட்டுள்ளன. போர்க்காலத்தை யொட்டிய நிழ்வுகளையும் ஷெல் தாக்குதல், விமானக் குண்டுத் தாக்குதல்களால் மக்களின் அவலநிலைகளை சித்திரிக்கும் படங்களும் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. -59

# பதவிவெற்றிடம்

சூழல் பாதுகாப்பில் ஆர்வம் உள்ளவர்களுக்கு ஒரு சந்தர்ப்பம்:
இதோ
சூழல் பாதுகாப்பினை பேணுவதற்கு ஒரு நிறுவனம்:
வாருங்கள்
நீங்களும் இணைந்து கொள்ளலாம்:
சேர்ந்து பணியாற்றலாம்.

சூழல் பாதுகாப்புத் தொடர்பாக ஆரம்பிக்கப்படவுள்ள நிறுவனம் ஒன்றிற்கு பின்வரும் பதவிகளுக்கான வேலை விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**விண்ணப்ப முடிவுத்திகதி: 25-11-1993**

## 01. பொதுமுகாமையாளர்

### தகமைகள்

கல்வித்தகைமைகள்:

தாவரவியல்/விவசாய பட்டதாரி
அல்லது
விவசாயம் சார்ந்த அரச/தனியார் நிறுவனம் ஒன்றில் 05 தொடக்கம் 10 வருடங்கள் நிர்வகித்த அனுபவம்

வயதெல்லை: 25 - 50 வரை

குறிப்பு: வனவளத்துறையில் கடமையாற்றிய அனுபவம் மேலதிக தகமையாகக் கருதப்படும்.

கல்வித்தகமைக்கும், அனுபவத்திற்கும் ஏற்ற தகுந்த சம்பளமும், வசதியும் வழங்கப்படும்.

## 02. கணக்காளர்

### தகமைகள்

கல்வித்தகமைகள்: அங்கீகரிக்கப்பட்ட ஒரு கணக்குத்துறைப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அல்லது

அரச/தனியார் நிறுவனம் ஒன்றில் கணக்காளராக 05 வருடங்களுக்கு மேல் கடமையாற்றிய அனுபவம்

வயதெல்லை: 25 - 50 வரை

குறிப்பு: கல்வித்தகமைக்கும், அனுபவத்திற்கும் ஏற்ற தகுந்த சம்பளமும், வசதிகளும் வழங்கப்படும்.

## 03. காசாளர்

### தகமைகள்

கல்வித்தகமைகள்: க. பொ. த. (உயர்தரம்) 04 பாடங்கள் சித்தி

அல்லது

அரச/தனியார் நிறுவனம் ஒன்றில் 10 வருடத்திற்கு குறையாது காசாளராக கடமையாற்றிய அனுபவம்

வயதெல்லை: 22 - 50 வரை

குறிப்பு: கல்வித்தகமைக்கும், அனுபவத்திற்கும் ஏற்ப தகுந்த சம்பளமும் வசதிகளும் வழங்கப்படும்.

## 04. கணக்கு எழுதுவினைஞர்

### தகமைகள்

கல்வித்தகமைகள்: க. பொ. த. (உயர்தரம்) 04 பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன் கணக்கியல் பாடத்தில் திறமைச்சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

அரச/தனியார் நிறுவனம் ஒன்றில் கணக்கு எழுதுவினைஞர் ஆக 05 வருடங்களுக்கு மேல் கடமையாற்றிய அனுபவம்.

வயதெல்லை: 20 - 50 வரை

குறிப்பு: கல்வித்தகமைக்கும், அனுபவத்திற்கும் ஏற்ற தகுந்த சம்பளமும் வசதிகளும் வழங்கப்படும்.

## 05. வன உத்தியோகத்தர்

### தகமைகள்

வன இலாகாவின் வன உத்தியோகத்தராக 10 வருடங்களுக்கு குறையாது கடமையாற்றிய அனுபவம்

அல்லது

அரச/தனியார் பெருந்தோட்டங்களில் வனம் வளர்ப்பது தொடர்பான பகுதியில் உத்தியோகத்தராக 05 வருடங்களுக்கு மேல் கடமை ஆற்றிய அனுபவம்

வயதெல்லை: 30 - 50 வரை

குறிப்பு: சவுக்கு நடுகையில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
கல்வித் தகமைக்கும், அனுபவத்திற்கும் ஏற்ற தகுந்த சம்பளமும், வசதிகளும் வழங்கப்படும்.

### கண்மூடித்தனமான

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். செயலகம், யாழ். புனித யாக்கோப்பர் தேவாலயம், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினால் பாதுகாப்பு வலயம் எனப் பிரகடனப்படுத்தப்பட்ட யாழ். போதனா வைத்தியசாலை சுற்றாடல் பகுதியில் நடாத்தப்பட்ட குண்டுத் தாக்குதல்களுக்கு பலத்த கண்டனம் தெரிவித்துள்ள வெகுஜன அமைப்பு ஒன்றியம் யாழ். அரச அதிபர் ஊடாக அனுப்பிய மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மேற்படி தாக்குதலினால் பாதிக்கப்படும் அன்றாட காயமடையும் நோயாளர்களை ஊர்தியில் வேலையில் எடுத்துச் செல்லும் மற்றும் உதவி நிவாரணப் பணியில் ஈடுபடும் தொண்டர் ஸ்தாபனங்களின் போக்குவரத்திற்கு விதிக்கப்பட்ட தடையை நீக்குமாறு கோருகிறோம்.

கடந்த 12ம் திகதி 8-45 மணியளவில் யாழ். செயலகம் மீது நடாத்தப்பட்ட குண்டுத் தாக்குதலில் யாழ். செயலக கட்டிடம் சேதமடைந்தது. அலுவலக உபகரணங்கள், அலுவலக கோப்புகள் மற்றும் தஸ்தாவேஜுகள் சேதமடைந்ததுடன் யாழ். அரச அதிபரும் காயமடைந்தார். மேலும் இத்தாக்குதலின் போது 25 பேர் காயமடைந்துள்ளனர்.

13ம் திகதி காலை 7-20 மணியளவில் 135 வருட பழமை வாய்ந்த யாழ். புனித யாக்கோப்பர் தேவாலயம் குண்டுவீச்சு விமானங்களின் தாக்குதலில் சேதமடைந்ததுடன் 11 அப்பாவிப் பொதுமக்கள் பலியாகினர். 25க்கும் மேற்பட்டோர் பலத்த காயமடைந்தனர்.

அன்று பிற்பகல் 2-25 மணியளவில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினால் பாதுகாப்புவலயம் எனப் பிரகடனப்படுத்தப்பட்ட பகுதியில் நடாத்தப்பட்ட குண்டுத்தாக்குதலினால் யாழ். போதனா வைத்தியசாலை கட்டிடங்கள் பல சேதமடைந்தன.

அன்று பிற்பகல் கொக்குவில் நந்தாவில் அம்மன்கோவிலுக்கு அருகில் நடைபெற்ற குண்டுத் தாக்குதலில் 10 பொதுமக்கள் காயமடைந்தனர்.

மேலும் யாழ். குடாநாட்டில் கண்டபடி மேற்கொள்ளப்படும் விமானக் குண்டுவீச்சினால் வணக்க ஸ்தலங்கள், பாடசாலைகள், பொது ஸ்தாபனங்கள் ஸ்தம்பிதமடைந்ததுடன் மக்கள் தொடர்ந்தும் பயப்பீதியுடனும் ஆபத்துடனும் வாழ்ந்து வருகின்றனர். பயங்கரவாதிகளுக்கு எதிரான தாக்குதல் எனக்கூறி பொது மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் அழிவு நடவடிக்கைகள்மூலம் அரசு இனப்பிரச்சினைக்கு தீர்வுக்கு வர அரசு விரும்பவில்லை என்பதைக் காட்டுகிறது.

இத்தகைய கண்மூடித்தனமான குண்டுத் தாக்குதல்கள் மற்றும் ஷெல் தாக்குதல்களை நிறுத்த தேவையான நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் இங்கு பாரதூரமான பெரும் எதிர்விளைவுகள் ஏற்படலாமென நாங்கள் அஞ்சுகிறோம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. -ஈ-சி

## சைக்கிள் விநியோகம்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச்சங்கத்தால் அண்மையில் கப்பல்மூலம் கொண்டுவரப்பட்ட சைக்கிள்களில் சங்கத்திற்கு கிடைத்த சைக்கிள்களை சங்க கிளைகள் மூலம் திருவுளச்சீட்டு முலுக்களில் தெரிவு செய்யப்படுபவர்களுக்கு வழங்கவுள்ளது.

பங்குப் பணம் செலுத்திய அங்கத்தவர்கள் எதிர்வரும் 19ம் திகதிக்குமுன்னர் இதற்கு விண்ணப்பிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது -72

### படை முகாம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வர்களைத் தவிர மேலும் எழுபது பேருக்கு என்ன நடந்தது என்பது பற்றி இதுவரையும் கண்டுபிடிக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இத்தாக்குதலின்போது தப்பியோடியவர்களில் சிலர் மீண்டும் முகாம் வந்து சேர்ந்துள்ளபோதும் மேற்கூறிப் எழுபது பேர் பற்றியும் தகவலொன்றும் இல்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ-நி)

### படை அதிகாரிகளுக்கு

1-ம் பக்கத் தொடர்ச்சி)

படுகிறது.

பூநகரி இராணுவமுகாம் விடுதலைப்புலிகளினால் தாக்கப்பட்டதையடுத்தே அரசு இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

வடபகுதி முகாம்களுக்கு விஜயம் செய்யும் படை உயரதிகாரிகள் அந்தஅந்த முகாம்களின் பாதுகாப்பு குறித்து ஆராய்ந்து அங்கு தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகளை தீவிரப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளவும் உத்தரவிடப்பட்டுள்ளது. இ-நி)

## 06. தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர்

### தகமைகள்

அரச/தனியார் பெருந்தோட்டங்களில் தென்னை வள உத்தியோகத்தராக 10 - 15 வருடங்கள் சேவையாற்றிய அனுபவமுள்ள

அல்லது

அரச/தனியார் தென்னந்தோட்டம் ஒன்றினை 10 - 15 வருடங்கள் நிர்வகித்த அனுபவம்

வயதெல்லை: 30 - 50 வரை

குறிப்பு: கல்வித்தகமைக்கும், அனுபவத்திற்கும் ஏற்ற தகுந்த சம்பளமும் வசதிகளும் வழங்கப்படும்.

## 07. தொழிலாளர்கள்

### தகமை

சவுக்கு, தென்னை மரங்களிலிருந்து விதை சேகரிப்பு மற்றும் நாற்று மேடை போடல், கன்று நடுகை போன்ற வேலைகளில் அனுபவமுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

சம்பளம்: பேசித்தீர்க்கப்படும்.

அனுபவத்திற்கு ஏற்ப தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

விண்ணப்பங்களை அனுப்பவேண்டிய முகவரி:

**விளம்பர இல: A 3592**
**C/o ஈழநாடு**
**யாழ்ப்பாணம்**

(ஏ-3592)

### மணிவாக்கு

"ஒவ்வொரு செயலைச் செய்வதிலும், உரிய மதிப்பையும் உறுதி நிதானத்தையும் கடைப்பிடிக்க வேண்டும் என்பதை நினைவில் கொள்"

- மார்க்ஸ் அரேலயஸ்

## ஜம்மு காஷ்மீர் ஹர்ஷத்பல் முற்றுகை நேற்றுடன் முடிவுற்றதாம்

### 65 தீவிரவாதிகள் சரண்

(புதுடில்லி)

ஜம்மு- காஷ்மீர் ஸ்ரீநகரில் கடந்த ஒரு மாத காலமாக இடம்பெற்றுவந்த ஹர்ஷத்பல் பள்ளிவாசல் முற்றுகை விவகாரம் நேற்று அதிகாலை 2 மணியுடன் முடிவுக்கு வந்துவிட்டதாம்.

இப் புனித பள்ளிவாசலுக்குள் இருந்த சுமார் 65 தீவிரவாதிகளும் நேற்று அதிகாலை வெளியேவந்து பாதுகாப்பு உயரதிகாரிகளிடம் சரணடைந்ததையடுத்து இவ்விவகாரம் முடிவுக்கு வந்துவிட்டது.

முதலாவது தீவிரவாதி நேற்று அதிகாலை சரியாக 2-20 மணியளவில் வெளியே வந்து பாதுகாப்பு அதிகாரிகளிடம் சரணடைந்தார். அவரைத் தொடர்ந்து ஏனைய தீவிரவாதிகளும் சரணடைந்தனர்.

சரணடைந்த 65 தீவிரவாதிகளும் ஜம்மு- காஷ்மீர் பொலிஸ் நிலையத்தில் விசாரணைக்காக ஒப்படைக்கப்பட்டனராம். உயரதிகாரிகளைக் கொண்ட குழுவொன்று பள்ளிவாசலுக்குள் சென்று நிலைமையை நேரடியாக அவதானித்ததுடன் பெருமளவு ஆயுதங்களையும் வெடிப் பொருட்களையும் மீட்டதாம். -க-இ

### முகாம் புதுப்பிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளினால் தாக்கப்பட்ட பூநகரி ராணுவ முகாமை புதுப்பிக்கும் நடவடிக்கையில் பாதுகாப்புப் படையினர் தற்போது ஈடுபட்டுவருவதாக சிரேஷ்ட இராணுவப்பேச்சாளர் பிரிகேடியர் நளின் அங்கமன தெரிவித்தார்.

காயமடைந்த படையினரை மீட்கும் பணிகள் பூர்த்தியடைந்து விட்டதாகவும் காயமடைந்த சிப்பாய்கள் கொழும்பு மற்றும் ஆஸ்பத்திரிகளுக்கு அனுப்பப்பட்டு விட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-இ)

## நமது நோக்கு

### வேண்டாமே இந்தச் சினம்!

வியட்நாம் போரின் போது மைலாய் என்ற கிராமத்தில் அமெரிக்காவின் 11வது படைப்பிரிவு அப்பாவிப் பொதுமக்கள் மீது நிகழ்த்திய கொடூரம் பற்றிப் பல தடவைகள் பேசப்பட்டன; விமர்சிக்கப்பட்டன.

அந்தக் கதை 16-3-68ல் நடந்தது. கிட்டத்தட்ட ஒரு தலைமுறைக்காலம் கடந்துவிட்டது.

ஆனால், 1993ல் "மைலாயின் நான்கு மணித்தியாலங்கள்" என்ற நூல் இலண்டனில் வெளியிடப்பட்டிருக்கின்றது. அது பற்றிய நூலாய்வு அண்மையில் வெளிவந்த "புரண்ட்லைன்" சஞ்சிகையில் வெளிவந்துள்ளது.

மறுக்கப்பட்ட நீதி என்ற பெயரில் ஒரு இராணுவத்தின் நடவடிக்கை மீளாய்வு செய்யப்படுகின்றது.

இரண்டாவது மகாயுத்தத்தின்போது, ஜப்பானின் இராணுவம் கொரியாவில் நடாத்திய கொடூரத்திற்கு ஐம்பது ஆண்டுகளுக்குப் பின், ஜப்பானிய பிரதமர் பகிரங்கமாக மன்னிப்புக் கேட்டிருக்கிறார். இது அண்மையில் நடந்த சம்பவம்.

இவற்றை இங்கு நாம் நினைவுபடுத்துவது ஏன்?

சிறீலங்கா இராணுவம், பயங்கரவாதத்தை அடக்குகிறோம் என்ற பெயரில் அப்பாவிப் பொதுமக்கள் மீது நடாத்தும் கொடூரங்கள் மறக்க கூடிய சம்பவங்களா? மூடிமறைக்கக் கூடிய நிகழ்ச்சிகளா?

நேரடி மோதல்களின் போதும், முகாம்கள் தாக்கப்படும்போதும், படையினர் சினம் கொள்கிறார்கள். அந்தச் சினத்தின் விளைவு என்ன?

நியாய வரம்புகளை மீறி கோவில்கள், தேவாலயங்கள், மருத்துவமனைகள் மீது வீசப்படும் குண்டுகள் எதனைக் காட்டுகின்றன.

யாழ். நகரில் கச்சேரி, தேவாலயம், மருத்துவமனைப் பகுதிமீது நடாத்திய குண்டுவீச்சோடு சாந்தமடையாது, கிளிநொச்சி மருத்துவமனை, தேவாலயம்மீதும் குண்டுகள் வீசப்பட்டுள்ளன.

சமாதானக் கதவுகள் திறந்து வைக்கப்படும் இலட்சணமா இது?

இத்தகைய சம்பவங்கள் இனங்களுக்கிடையே நிரந்தர பிளவுகளையும், பகைமையையும், வெறுப்புணர்வுகளையும் வளர்க்கும் என்பதை அரசுத் தலைவர்களும், வெளிநாட்டு இராணுவக் கல்லூரிகளில் பயிற்சிபெற்ற இராணுவ அதிகாரிகளும் மறந்துவிட்டது ஏன்?

"சினமடையாதே, சீறி விழாதே!" என்ற கீர்த்தனையையாவது மறக்கலாமோ?

## காயமடைந்த படையினரை அமைச்சர் பார்வையிட்டார்

(கொழும்பு)

கொழும்பு இராணுவ ஆஸ்பத்திரிக்கு நேற்றுமுன்தினம் விஜயம் செய்த மகளிர் விவகார சுகாதார அமைச்சர் செல்வி ரேணுகா ஹேரத் அங்கு காயமடைந்த பெருமளவு படையினரைப் பார்வையிட்டார்.

பூநகரி இராணுவ நடவடிக்கையின்போது காயமடைந்த இராணுவச் சிப்பாய்கள் கொழும்பு ஆஸ்பத்திரி மற்றும் பல்வேறு ஆஸ்பத்திரிகளிலும் சிகிச்சை பெற்றுவருவது இங்கு குறிப்பிடத்தக்கது. —க —இ

## ஆயத்தநிலையிலிருந்தும் புலிகள் தாக்கிவிட்டனர்

(லண்டன்)

பூநகரி இராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகள் எந்த நேரத்திலும் தாக்குதலை மேற்கொள்வார்கள் என புலனாய்வுப் பிரிவு முன்கூட்டியே எச்சரிக்கை செய்திருந்தது. நாம் அதற்குத் தயார் நிலையில் இருந்தும்கூட புலிகள் எம்மீது தாக்குதலை தொடுத்துவிட்டார்கள்.

இவ்வாறு இராணுவ அதிகாரியொருவர் கூறியதாக பி. பி. ஸி. தெரிவித்தது.

பூநகரிப் பகுதியில் இராணுவ மீட்பு வேலைகள் நடைபெற்றாலும் இப்பகுதியைச் சுற்றியுள்ள வாவிகளில் இராணுவத்தினரின் பெருமளவு சடலங்கள் இன்னமும் மிதந்துகொண்டே இருக்கின்றது.

இம்மோதலினால் இலங்கை இராணுவம் தனது வரலாற்றில் மிக மோசமான பின்னடைவைச் சந்தித்துள்ளதுடன் பல கோடி ரூபா பெறுமதியான ஆயுதங்களையும் விடுதலைப் புலிகளிடம் பறிகொடுத்துவிட்டது என்று பி. பி. ஸி. மேலும் தெரிவித்தது. (வி-இ)

## பூநகரி தாக்குதல் எதிர்க்கட்சியினருக்கு பிரதமர் விளக்கம்

(கொழும்பு)

பூநகரி இராணுவ முகாம் தாக்குதல் தொடர்பான விபரங்கள் குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு நேற்று முன்தினம் விளக்கமளித்தாராம்.

பாராளுமன்ற கூட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களான தினேஷ் குணவர்த்தன, அத்தாவுட செனிவிரத்தின, டீ. பிறேமச்சந்திரன், எம். எச். எம். அஷ்ரப் ஆகியோர் சமூகமளித்திருந்தனர்.

பிரதமர் ரணிலுக்கு ஆலோசனை வழங்கும் முகமாக ஜனாதிபதியின் செயலாளர், பாதுகாப்பு அமைச்சு செயலாளர், விமானப்படைத் தளபதி, கடற்படைத் தளபதி, இராணுவ பிரதம உத்தியோகத்தர்கள் ஆகியோரும் சமூகமளித்திருந்தனராம்.

எதிர்க்கட்சித்தலைவி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் வேண்டுகோளுக்கிணங்க ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க இதற்கான பணிப்புரையை விடுத்திருந்தாராம். --க-இ

### இராசி பலன்

17-11-1993

புதன்கிழமை

(தமிழுக்கு கார்த்திகை 2

சதுர்த்தி மு. இ. 10-16 வரை: மூலம் மு. ப. 11 31 வரை. இராகுகாலம் நண்பகல் 12-08 முதல் 1-38 வரை: சுபநேரம் மாலை 4-38 முதல் 6-08 வரை. மரண யோகம், சதுர்த்தி விரதம்.

மேஷம்: முயற்சிகளில் வெற்றி, பணவரவு, தலைமைத்துவம்.

இடபம்: இடமாற்றம், தொழில் பாதிப்பு, அலைச்சல்.

மிதுனம்: வேண்டாத தொல்லை, குடும்பத்தகராறு, பணமுடை.

கடகம்: வருவாய் அதிகரிப்பு. தாய்வழி உதவி, சுப நிகழ்ச்சி.

சிம்மம்: வசதிக் குறைவு, உடல் உபாதை, அவமதிப்பு.

கன்னி: ஏமாற்றம், பணியால் துன்பம், உறவினர் பழி.

துலாம்: தாயார் ஆலோசனை, நண்பர் வருகை, பணப் புழக்கம்.

விருச்சிகம்: தொழில் தகராறு, எதிர்பாராத துயர், மனச்சுமை.

தனுசு: மனைப் பிரவேசம், தொழில் சிறப்பு, மனைவியர் உதவி.

மகரம்: சென்ற இடத்தில் விரோதம், கடன்பாடு, புத்திரர் கவலை.

கும்பம்: குடும்ப மகிழ்ச்சி, வாக்கு வசீகரம், புத்தி மேன்மை.

மீனம்: பாராட்டு, செல்வந்தர் நட்பு, புதிய ஸ்தானம்.

— ஜோஸ்யர்.

## வெளிநாட்டு நிறுவனங்களுக்கு பொய்ப் பிரசாரம்

(யாழ்ப்பாணம்)

"வடபகுதியில் மக்களுக்குச் சேவைகளைச் செய்ய முடியாதுள்ளதாக வெளிநாட்டு நிறுவனங்களுக்கு பொய்ப் பிரசாரம் செய்யப்படுகின்றது. ஆனாலும் வடபகுதி செயற்பாடுகளை அவதானிப்பதற்கு 90-ம் ஆண்டுக்குப் பிற்பட்ட பகுதிகளில் மூன்று வெளிநாட்டு நிறுவனங்கள் வடபகுதிக்கு வந்துபோயுள்ளன." என யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணைய 5ம் ஆண்டு நிறைவு தினத்தை ஒட்டி நடாத்தப்பட்ட பத்திரிகையாளர்களுடனான கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டது.

அங்கு பத்திரிகையாளர் கேட்ட கேள்விகளுக்கு பதிலளித்த இணைய பிரதிநிதிகள் மக்களுக்கு நிவாரணத்தை வழங்குவது மட்டும் எமது செயற்பாடாக அமையாது நிவாரணம்கொடுத்தால் வாழ்நாள் பூராவும் கொடுக்க வேண்டியிருக்கும். அதனால் நிவாரணத்தைக் கொடுப்பதுடன் மட்டும் நின்றுவிடாது மக்களின் உயர்வுக்கும் வளர்ச்சிக்கும் தேவையான செயற்பாடுகளை செயற்படுத்துவதில் நாம் கூடிய அக்கறைகொண்டுள்ளோம் 16 அரசசார்பற்ற நிறுவனங்கள் ஒருங்கிணைந்து கொண்டதனால் அனைத்தினதும் ஒருங்கிணைந்த வளத்தினால் மக்களுக்கே சேவையாற்றப்படுகின்றது என தெரிவிக்கப்பட்டது. -158 -இ

## கிளிநொச்சியில் ஆஸ்பத்திரி மீதான தாக்குதல் துர் அதிஷ்டவசமானதாம்

(கொழும்பு)

கிளிநொச்சி மாவட்ட ஆஸ்பத்திரி மீது நேற்று முன்தினம் நடாத்தப்பட்ட குண்டு வீச்சானது தவறுதலாக மேற்கொள்ளப்பட்ட துர் அதிஷ்டவசமான ஒன்று எனவும் இதன்போது 3 கர்ப்பிணிப் பெண்கள் இறந்துள்ளதாக இலங்கை பாதுகாப்பு அமைச்சு நேற்று தெரிவித்தது.

ஏற்கனவே யாழ் செயலகம், குருநகர் தேவாலயம், யாழ். ஆஸ்பத்திரிக்கு அருகிலான தாக்குதலுக்கும் இவ்வாறு காரணம் கூறிய ஒரு சில தினங்களுள் கிளிநொச்சி ஆஸ்பத்திரி மீது தாக்குதல் இடம்பெற்றுள்ளதும் குறிப்பிடத்தக்கது. -க-சி


பரீட்சைச்சபை - கல்வித் திணைக்களம் - யாழ்ப்பாணம்

ஆண்டிறுதித் தேர்வு - 1993 நேரசூசி

15-11-93-ம் திகதி பரீட்சை ஆரம்பமாகும் என எம்மால் சகல பாடசாலைகளுக்கும் அனுப்பப்பட்ட நேரசூசி பின்வருமாறு மாற்றப்பட்டு - தேர்வு நடைபெறும்.

| | |
|---|---|
| 1ம் நாள் 19. 11. 93 வெள்ளி | 2ம் நாள் 20. 11. 93 சனி |
| 3ம் நாள் 29. 11. 93 திங்கள் | 4ம் நாள் 30. 11. 93 செவ்வாய் |
| 5ம் நாள் 01. 12. 93 புதன் | 6ம் நாள் 02. 12. 93 வியாழன் |
| 7ம் நாள் 03. 12- 93 வெள்ளி | 8ம் நாள் 04. 12. 93 சனி - (முற்பகல் |
| 9ம் நாள் 04. 12. 93 சனி பிற்பகல், | |

நேரசூசி மாற்றத்தை அவதானித்துத் தேர்வினை செவ்வனே நடாத்துமாறு சகல பாடசாலை அதிபர்களும் வேண்டப்படுகின்றனர்.

கல்வித்திணைக்களம்,
யாழ்ப்பாணம்,
16-11-1993.

துரை தியாகராசா
செயலாளர்,
பரீட்சைச் சபை.

குறிப்பு: இரண்டாம் கட்ட வினாத்தாள்களைப் பெறுவதற்கு சகல கொத்தணி உதவியாளர்களும் 25-11-93 மு. ப. 9-00 மணிக்கு யாழ். இந்துமகளிர் கல்லூரிக்கு சமூகம் கொடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

எ-3593


**வன வளம இல்லையேல் மழை வளம் இல்லை**

# பூநகரியில் முகாமிட்டுள்ள ராணுவம் அங்கு நடமாட அச்சம்

(கொழும்பு)

பூநகரிப் பகுதியில் இராணுவம் மீண்டும் நிலைகொண்டுள்ளபோதிலும், இப்பகுதிகளில் நடமாடுவதற்கு மிகவும் அஞ்சுவதாக தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகள் பூநகரிப் பகுதியிலிருந்து விலகிவிட்டதாக அறிந்திருந்தபோதிலும், அவர்களின் கண்காணிப்பு தமது மீது இருக்கக்கூடுமென்ற அச்சத்தினாலும் கண்ணிவெடிகளும் மற்றும் மிதிவெடிகளும் இப்பிரதேசம் முழுவதும் பெருமளவு புதைந்து வைக்கப்பட்டிருக்கலாம் என்ற அச்சத்தினாலும் தரை இறக்கப்பட்ட இராணுவத்தினர் இப்பகுதிகளில் நடமாடுவதற்கு பெரிதும் அஞ்சுவதாகவும் கூறப்படுகிறது.

தரை இறக்கப்பட்ட புதிய இராணுவத்தினர் சிலர் மிதிவெடிகளில் சிக்கி காயமடைந்துள்ளதாகவும், கண்ணிவெடிகளையும், மிதிவெடிகளையும் அகற்றும் இராணுவக்குழுவினரும், இப்பகுதிக்கு அனுப்பி வைக்கப்படவில்லையென்றும் தெரிவிக்கப்படுகிறது. (வி.ரி)

## காயமடைந்த படையினரை பிரதமர் பார்வையிட்டார்

(கொழும்பு)

பூநகரி இராணுவ முகாம் தாக்குதலில் காயமடைந்து, ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருக்கும் படையினரை பிரதமர் ரணில் நேற்று நேரில் பார்வையிட்டார்.

500க்கும் மேற்பட்ட படையினர் கொழும்பு இராணுவ ஆஸ்பத்திரி உட்படப் பல வேறு ஆஸ்பத்திரிகளில் இப்போது அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காயமடைந்த படையினரையும் பிரதமர் அவர்களோ நேரில் சந்தித்து உரையாடுவதையும் ரூபவாஹினி நேற்று ஒளிபரப்பியது. -இ-ரி

வேலணை, ஊர்காவற்றுறை, நெடுந்தீவு

# உ. அ. அதிபர் அலுவலகங்கள் சுபாஸ் விடுதிக்கு மாற்றம்

(மானிப்பாய்)

யாழ். செயலகத்தில் இயங்கி வந்த வேலணை, ஊர்காவற்றுறை, நெடுந்தீவு ஆகிய உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்கள் நேற்று 16ந் திகதி முதல் யாழ். சுபாஸ் விடுதிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை செயலகத்தில் இயங்கி வந்த புனர்வாழ்வுப் பகுதி தற்போது யாழ். நகர் மத்தியில் பழைய பஸ் நிலையத்திற்கு சமீபமாகவுள்ள தனியார் கட்டிடமொன்றில் செயல்பட்டு வருகின்றது. மேலும் செயலகத்தின் மேல்மாடியில் செயல்பட்டு வந்த சில பிரிவுகளும் அரச அதிபரின் அலுவலகம், மேலதிக அரச அதிபரின் அலுவலகம் என்பன கீழ்மாடியில் செயல்படவுள்ளன. இதற்கான இடமாற்றம் செய்யும் வேலைகளில் செயலக அதிகாரிகளும் ஊழியர்களும் ஈடுபட்டுள்ளனர். (71-ரி)

### தொண்டமனாற்றில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இருந்த கடற்படையினர் விமானத் தாக்குதல் நடைபெற்றுக்கொண்டிருந்த பகுதியை நோக்கிப் பீரங்கித் தாக்குதலையும், வளலாய் இராணுவ முகாம் பகுதியில் இருந்து இராணுவத்தினர் ஷெல் மற்றும் துப்பாக்கிப் பிரயோகத்தையும் மேற்கொண்டனர்.

இந்த முமமுனைத் தாக்குதலை அடுத்துப் பீதியடைந்த சுற்றுப்புறக் கிராமங்களில் உள்ள மக்கள் பதற்றத்துடன் சொந்த இடங்களை விட்டு வெளியேறினர். —ரி

# கரும்புலி உருவப்படங்கள் யாழ். குடாவில் ஊர்வலம்

## மக்கள் இறுதி அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

பூநகரி கடற்படை, இராணுவக் கூட்டு முகாம் தகர்ப்புக்கு வித்திட்டவர்களான மேஜர் கணேஷ், மேஜர் கோபி ஆகியோரின் உருவப் படங்கள், மக்களின் இறுதி அஞ்சலிக்காக நேற்று யாழ் குடா முழுவதும் ஊர்வலமாக எடுத்து வரப்பட்டன.

நவக்கிரியில் மேஜர் கணேஷின் இல்லத்தில் இருந்து ஆரம்பமான உருவப் படங்களைத் தாங்கிய ஊர்தி ஊர்வலம், நேற்றுப் பகல் 1-00 மணிக்கு யாழ். நகரை வந்தடைந்தது.

யாழ். நகர் ஊடாகத் தென்மராட்சிப் பகுதியை நோக்கிச் சென்று, அங்கிருந்து வடமராட்சிக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

ஊர்தி ஊர்வலம் சென்ற இடமெல்லாம் மக்கள் வீட்டு வாசல்களிலும், பொது இடங்களிலும் குழுமி நின்று, குத்து விளக்கேற்றி, வீதிகள்தோறும் நச்சல் உருவப் படங்களுக்கு மலர் தூவி, கதறி அழுதும், கண்ணீர் மல்கியும் அஞ்சலி செலுத்தினர். —ரி

## நாடாளுமன்றத் தெரிவுக்குழு முடிவு

# வெறும் பிசுபிசுப்பு!

(லண்டன்)

இலங்கை இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக நியமிக்கப்பட்ட நாடாளுமன்ற தெரிவுக்குழு இனப்பிரச்சினைக்கு எப்படி தீர்வு காணப்பட வேண்டும் உள்நாட்டு யுத்தத்தை எப்படி நிறுத்த வேண்டும் என்பதற்கெல்லாம் ஆலோசனைகளை தெரிவிக்காது இரண்டு ஆண்டுகளுக்குப் பின்பு தனது அறிக்கையை அரசிடம் சமர்ப்பித்திருக்கின்றது.

இவ்வாறு பி. பி. ஸி நேற்று தெரிவித்தது. இதுசம்பந்தமாக பி. பி. ஸி மேலும் தெரிவித்துள்ளதாவது:

வடக்கையும் - கிழக்கையும் பிரித்து தனித்தனிமாநிலங்களாக்க வேண்டும் என்று நாடாளுமன்றத் தெரிவுக்குழு முடிவு செய்தபோது அரசுக்கு ஆதரவாக இருந்த தமிழ் முஸ்லிம் கட்சிகள் தெரிவுக் குழுவின் இந்த முடிவை வன்மையாக கண்டித்து இக்குழுவிலிருந்து வெளியேறின.

சிறுபான்மை தமிழர்களுக்கு அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்று தெரிவுக் குழுதெரிவித்துள்ளபோதிலும் அதற்கான விபரங்களையோ அல்லது அதிகாரங்களின் விளக்கங்களையோ இந்த அறிக்கையில் தெரிவிக்கவில்லை.

இந்த நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் முடிவுகளை முன்பே நிராகரித்த விடுதலைப் புலிகள் இக்குழு தனது அறிக்கையை அரசிடம் சமர்ப்பித்த தினமே பூநகரி முகாம் தாக்குதலை மேற்கொண்டிருந்தனர். இந்த அறிக்கை சமர்ப்பிப்பு பற்றி யாரும் சிந்திக்காது பூநகரி முகாம் தகர்ப்பு பற்றியே கவனத்தை திசை திருப்பியதும் குறிப்பிடத்தக்கது. (வி-ரி)

# நோயாளர்கள் குமணவில் செல்ல அனுமதி மறுப்பு

(யாழ்ப்பாணம்)

குமண கப்பல் மூலம் எதிர்வரும் 20ம் திகதி பருத்தித்துறையிலிருந்து திருகோணமலை செல்வதற்குத் தெரிவு செய்யப்பட்ட நோயாளர்களுக்கு, அக்கப்பலில் பயணம் செய்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேலதிக சிகிச்சைக்காக மேற்குறிப்பிட்ட திகதியில் நோயாளர்கள் கொழும்பு செல்வதற்காக ஒழுங்கு செய்யப்பட்டிருந்த கப்பல் சேவை நடைபெறமாட்டாது என்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தை மேற்கோள் காட்டி யாழ். போதனா வைத்திய சாலைப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (162-158-ரி)

## பூநகரிப் பகுதியில்

# இரண்டாயிரம் படையினர் மீண்டும் முகாமிட்டுள்ளனர்?

(கொழும்பு)

பூநகரி இராணுவ முகாமில் தற்போது இரண்டாயிரம் பேரடங்கிய இராணுவப் படைப்பிரிவு நிலைகொண்டுள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இப்படைப் பிரிவுக்கு உதவியாக விமானப்படையினர் தொடர்ந்து உதவி வருவதாகவும் இம்முகாம் மீதான தாக்குதலின்போது காட்டுக்குள் தப்பியோடிய படையினர் சிலர் மீண்டும் முகாமிற்கு திரும்பியுள்ளதாகவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இதேவேளை பலாலி முகாமிற்கும் பூநகரி இராணுவ முகாமிற்குமிடையில் தொடர்ந்து ஹெலி கொப்டர்கள் அடிக்கடி சென்று வருவதை அவதானிக்க கூடியதாக இருந்தது. (வி)

## கொழும்பில்

# புலிகள் ஊடுருவலைத்தடுக்க புதிய நடவடிக்கையாம்

(கொழும்பு)

கொழும்பில் புலிகளின் ஊடுருவலைத் தடுப்பதற்கு புதிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாக அரசு தரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

தற்போதைய சூழ்நிலையில் இன மோதலையும் பதற்றம் தூண்டிவிடக்கூடிய முயற்சிகள் மேற்கொள்ளப்படலாம் என்பதால் பொதுமக்கள் விழிப்பாக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

புலிகள் இயக்கத்தின் ஊடுருவல் குறித்து தமக்கு தெரிந்த தகவல்களை உரிய இடங்களுக்குத் தெரியப்படுத்துமாறு பாதுகாப்பு பிரிவினர் அறிவுறுத்தியுள்ளனராம். (வி)

# கிளிநொச்சியில் காயமடைந்த மூவர் வவுனியாவிற்கு அனுப்பி வைக்கப்பட்டனர்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சியில் நேற்று முன்தினம் வைத்தியசாலை மீது மேற்கொள்ளப்பட்ட விமானக் குண்டுவீச்சினால் படுகாயமடைந்தவர்களில் மூவர் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க கிளிநொச்சிக் கிளையின் உதவியுடன் வவுனியா ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

இடிபாடுகளுக்கிடையில் அகப்பட்ட இரண்டு கர்ப்பிணித்தாய்மாரும், பெண் தாதிய உத்தியோகத்தர் ஒருவருமாக ஆபத்தான நிலையில் இருந்த மூவருமே வவுனியா ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டவர்களாவர். (வி)

## தொடர்ந்து ஊரடங்கு

(கொழும்பு)

யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் அமுல் செய்யப்பட்டுவரும் ஊரடங்கு உத்தரவு மறு அறிவித்தல் வரை தொடர்ந்து அமுலில் இருக்கும் என பாதுகாப்பு அமைச்சு நேற்று தெரிவித்துள்ளது.

இதேவேளையில் வவுனியாவில் அமுல் செய்யப்பட்டு வரும் ஊரடங்கு உத்தரவு நேற்றுக்காலை 6 மணியுடன் நீக்கப்பட்டதாக பாதுகாப்பமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (வ-ரி)

கிரிக்கெட்:

## இந்தியா தோல்வி

(புதுடில்லி)

இந்தியாவில் நடைபெற்று வரும் ஒரு நாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் நேற்று இந்தியா, மேற்கிந்தியாவிடம் தோல்வி அடைந்தது.

நேற்று அஹமதாபாத்தில் நடைபெற்ற மேற்படி போட்டியில் முதலில் துடுப்பு எடுத்தாடிய மேற்கிந்தியா, 50 ஓவர்களில் 7 விக்கெட்டுகள் நஷ்டத்திற்கு 202 ஓட்டங்களைப் பெற்றது.

இதன் பின்பு மழை அடிக்கடி பெய்ததையால், 38 ஓவர்களில் 170 ஓட்டங்களைப் பெற வேண்டிப் பணிக்கப்பட்டது ஆனால் இந்தியா 100 ஓட்டங்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது. -வி-ரி

# எதிர்க்கட்சித் தலைவியின் சம்பளம் அதிகரிப்பு

(கொழும்பு)

கருத்திட்ட அமைச்சர்களின் சம்பளம் அதிகரிக்கப்பட்டுள்ளது. ராஜாங்க அமைச்சர்கள் பெறும் சம்பளத்துக்குச் சமமான சம்பளத்தை இவர்கள் இனிமேல் பெற்றுக்கொள்வார்கள்.

இந்தச் சம்பள அதிகரிப்புடன் எதிர்க்கட்சித் தலைவியின் சம்பளமும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு, இந்தச் சம்பள அதிகரிப்புச் சம்பந்தமான சட்ட மூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

நாடு இன்று பெரும் ஆபத்தை எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் வேளையில் இந்தச் சம்பள அதிகரிப்பை எதிர்க் கட்சிகள் கண்டித்துள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சியில் உள்ள 125 எம். பி.க்களில் 120 எம். பி.க்கள், அமைச்சர்கள் அனுபவித்துவரும் சலுகைகளைப் பெற்றுள்ளனர். இலங்கை போன்ற ஒரு நாட்டுக்கு இது மிகப் பெரிய சுமை என்று தான் கூறவேண்டும் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த எம். பி. திரு ரிச்சர்ட் பத்திரனே தெரிவித்துள்ளார். -இ-ரி

### தமிழீழத்தைப்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

எம். பி. பஷீர் சேகுதாவூத் நேற்று நாடாளுமன்றத்தில் வரவு செலவுத்திட்ட விவாதம் மீதான விவாதத்தில் உரை நிகழ்த்தியபோது மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் பேசுகையில் கூறியதாவது:

பத்து ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததைவிட விடுதலைப் புலிகளின் வலிமை இப்போது வளர்ந்துள்ளது. கொழும்புக்கு வந்து தாக்குதல் நடத்துமளவுக்கு அவர்கள் பலம் வளர்ந்துள்ளது.

ஆரம்பத்தில் மறைந்திருந்து தாக்குதல் நடத்திவந்த விடுதலைப் புலிகள் இப்போது பூநகரி போன்ற இராணுவமுகாம் களைத் தாக்க ஆரம்பித்துள்ளனர். இதன்மூலம் தமிழ் ஈழத்தைப் பெற்றுக்கொள்ளும் அளவுக்கு அவர்கள் வளர்ச்சியடைந்துள்ளது தெளிவாகிறது.

இதனாலேயே இன்று வடக்கு கிழக்குப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டியதன் அவசியம் ஒரு அவசர தேவையாக மாறிவிட்டது.

இந்தப்பிரச்சினைக்கு தீர்வு காணும் முகமாக சாதாரண எம். எச். முஹம்மது யாழ்ப்பாணம் போகத் திட்டமிட்டுள்ளார்.

அவரது யாழ் விஜயம் சாத்தியப்படும் பட்சத்தில், அஷ்ரஃப் முஹம்மது அரசின் சார்பில் யாழ்பாணத்துக்குக் கொண்டு செல்லவிருக்கும் தீர்வுத்திட்டம் பொது மக்களுக்குத் தெரியப்படுத்தப்பட வேண்டும் என்றார். (இ-ரி)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் கூட்டுறவுக்காக யாழ்ப்பாணம், இலங் கோவில் வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1993-ம் ஆண்டு நவம்பர் மாதம் 17-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office, Sri Lanka under Licence Number B 10 336/B1